RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22340

# பழனிமலைப் புலையரின் பூப்புச் சடங்கு முறைகள்

என்.பி.பி. பழனிவேல் ராஜன் [அ, *]

[அ] தமிழ்த் துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்-624302, இந்தியா

# Puberty Ceremony of Palanimalai Pulaiyar

N.P.P. Palanivel Rajan [a, *]

[a] Department of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University), Gandhigram, Dindigul-624302, Tamil Nadu, India

* Corresponding Author:
kodainprajan@gmail.com

Received: 22-04-2022
Revised: 12-06-2022
Accepted: 21-06-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

The Pulaiyars are one of the hill Peoples living in the Palanimalai range. Just as each ethnic group has its own uniqueness in their life, this hill tribes also having their uniqueness. It includes their all ritual events, peculiarly their puberty ceremony. The ritual event held especially for the blooming woman is seen as unique. Data was collected from field work in Nallurkadu Valavu village under Kodaikanal circle in Dindigul district. Based on that, the purpose of this article is to explore the information about the flower festival of the Pulaiyar people living in the Lower Palanimalai and its related events, folklore, cuisine and traditional music events.

**Keywords:** Pulaiyar, Puberty, Pulaiyars ceremony, Puberty ceremony, Palanimalai Pulaiyar

## முன்னுரை

பழனிமலைத் தொடர் பகுதியில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்களுள் புலையர் இன மக்களும் ஒருவர். ஒவ்வொரு இனத்தவரும் தத்தமக்கென தனித்துவமான வாழ்க்கை முறைகளைக் கொண்டிருப்பதைப் போல மலைவாழ் மக்களான புலையர்களும் தங்களுக்கென்று தனித்துவமான வாழ்வியல் முறைகளைக் கொண்டுள்ளனர். குறிப்பாக பூப்பெய்திய பெண்ணுக்கு நடத்தப்படும் சடங்கு நிகழ்வு தனித்துவமாகக் காணப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்திற்கு உட்பட்ட நல்லூர்க்காடுவளவு என்ற கிராமத்தில் களப்பணி சென்று தரவுகள் சேகரிக்கப்பட்டன. அதனடிப்படையில் கீழ்ப்பழனிமலையில் வாழும் புலையரின மக்களின் பூப்புச்சடங்கு குறித்த தகவல்களையும், அது சார்ந்த நிகழ்வுகளையும், புழங்கு பொருட்களையும், உணவு முறைகளையும், பாரம்பரிய இசை நிகழ்வுகளையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

புலையர் இன மக்களின் வாழ்வியல் முறைகள் குறித்து ஆங்காங்கே பரவலாக ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் எட்கர்தர்ஸ்டன் அவர்கள் எழுதிய “தென்னிந்திய குலங்களும் குடிகளும்" என்ற நூல் தனித்துவமானது. ஜெ.எம்.நெல்சன் அவர்களின் “மதுரை மாவட்ட கையேடு", அன்னகாமு அவர்களின் “மேல்மலை மக்கள்", கே.ஏ.குணசேகரன் அவர்களின் “தமிழக மலையின மக்கள்", ஆதிபாலசுந்தரன் அவர்களின் “சேரர் வரலாறும் பழனிமலைவாழ் பழங்குடி மக்களும்", பக்தவத்சல பாரதி அவர்களின் “தமிழகப் பழங்குடிகள்" முதலான நூல்களில் புலையர் இன மக்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுச் சங்கம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் “பழனிமலைப் பளியர் புலையர் - வாழ்வும் வரலாறு" என்ற நூலை

வெளியிட்டுள்ளது. இவ்வாய்வுக்கட்டுரை மேற்கூறிய நூல்களின் கருத்துகளோடு இன்றைய நிலையில் உள்ள புலையர்களின் வாழ்வியல் முறைகளை எடுத்துரைப்பதில் தனித்துவமாக காணப்படுகிறது.

புலையன் என்ற சொல்லுக்கு தமிழ் லெக்சிகனில் (Tamil Lexicon) "கீழ்மகன்" (கீழ்ச்சாதியான்) என்று பொருள் தரப்பட்டுள்ளது. அதே சொல்லுக்குப் "புரோகிதன்" என்று வேறொரு பொருளும் தரப்பட்டுள்ளது. தமிழகத்தில் கோயமுத்தூர், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைகளில் புலையர் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஆதிவாசி, பொலையர், புலையர், புலையன், மலைப்புலையன் என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். 1970ஆம் ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கம் பழங்குடிப் பட்டியலில் சேர்த்திருந்தது. 1970 பின்பு பழங்குடிப் பட்டியலிலிருந்து விளக்கப்பட்டு (Scheduled Tribe to Scheduled Caste) தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். தங்களை பழங்குடிப் பட்டியிலில் மீண்டும் சேர்க்க வேண்டும் என்பது இம்மக்களின் முக்கிய கோரிக்கைகளுள் ஒன்றாக உள்ளது.

## புலையர்களின் வாழ்விடம்

ஆரம்ப காலங்களில் புலையரின மக்கள் அளை, பாறை இடுக்கு, மரப்பொந்து முதலானவற்றில் வாழ்ந்து வந்தனர். பின்வந்த காலக்கட்டங்களில் கூரை வீடு, தகர வீடு, ஓட்டு வீடு, சிமெண்ட் வீடு முதலானவற்றில் வாழ்கின்றனர். சிமெண்ட் வீடுகள் அரசாங்கத் திட்டங்களின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மரபுசார்ந்த வீடுகளையும் காணமுடிந்தது. மண் சுவர் வீடு, கத்தாழை, வாழைப் பட்டையில் சுற்றி கட்டப்பட்ட வீடு என அவர்கள் வாழும் இடங்களில் அடுக்கடுக்காக வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

புலையரின மக்கள் வாழும் பகுதிகள் மலை, பாறை, வயல், காடு, கோம்பை, கொம்பு, வளவு என்ற பின்னொட்டுப் பெயர்களைக் கொண்டுள்ளன. தோனிமலை, கடையமலை, பூமலை, நேர்மலை, சோலைக்காடு, சிறுவாட்டுக்கோம்பை, ஊத்துக்காடு, பேத்தரைக்காடு, எழுத்தரைக்காடு, சுடலைப்பாறை, கரடிப்பாறை, கவுச்சிகொம்பு, மங்களம்கொம்பு, பாறைப்பட்டி, கொட்டகொம்பு, நடனங்கால்வாய், வெள்ளரிக்கரை, கள்ளக்கிணறு, சேம்படியூத்து, மன்றவயல், கும்பறையூர், பூலத்தூர், முறுக்கடி முதலான ஊர்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்

## பூப்பு என்பதன் விளக்கம்

பூத்தல் என்பது பெண்ணிடம் தோன்றும் முதல் மாதவிடாயைக் குறிக்கும். சங்க இலக்கியத்திலும் பூப்பு, பூத்தல் என்ற சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. பெண்கள் பருவம் எய்தும் பூப்பு நிகழ்வை அவரவர் குல வழக்கின் படி நடத்துகின்றனர். பழனிமலைப் புலையர் இன மக்களும் அவர்களுக்கே உரிய தனித்துவமான முறையில் இச்சடங்கை நடத்துகின்றனர். “இயற்கையில் காணப்படும் ஒவ்வொரு உயிரினமும், தத்தம் பருவ வளர்ச்சியை ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்துகின்றன. பெண்ணின் வாழ்வில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக பூப்பெய்துதல் கருதப்படுகிறது. பூப்படைதல் என்பது பெண் இனப்பெருக்கத்திற்குரிய வயதை அடைந்துவிட்டாள் என்பதை குறிப்பதாகும். பூப்பு என்னும் சொல் பூத்தல் என்ற பொருளையும், மாதவிடாய் என்னும் பொருளையும் குறிப்பதாகும். பூத்தல் என்பது பெண்ணானவள் திருமணத்திற்கு தயாராகிவிட்டாள் என்பதைக் குறிக்கும்" என்று பவித்ரா அவர்கள் குறிப்பிடுகிறார் (Pavithra, 2013). “புனிதத்தன்மையைப் பாதுகாக்கவும் அதற்கு களங்கம் ஏற்படாமல் இருக்கவும் தீயவற்றிலிருந்து தனிமைப்படுத்தித் தூய்மையாக வைக்கவும் மேற்கொள்ளப்படுகின்றன" என்று சடங்கு நிகழ்வு குறித்து பக்தவச்சல பாரதி குறிப்பிடுகின்றார் (Baktavatchala Bharathi, 1990).

## புலையரின மக்களின் பூப்புச்சடங்கு

இம்மக்கள் சடங்கினைத் திரட்டி என்று அழைக்கின்றனர். குடிசை தாய்மாமனால் கட்டப்படுகிறது. வெரலிக்குச்சி, சவுக்குகம்பு, வாழைப்பட்டை, கூந்தல்பனைஓலை முதலானவற்றை

வைத்து தாய்மாமன், தாய்வழியில் உறவுடைய மாமன்கள் குடிசையைக் கட்டுகின்றனர். பொதுவாக அங்குள்ள பெண்கள் மல்லிகை, கனகாம்பரம் முதலான பூக்களைப் பயன்படுத்தினாலும், பாரம்பரியமாக முன்னோர்கள் பயன்படுத்திய வெள்ளைப்பூ என்ற 'நாவா'பூவினையும் இச்சடங்கில் தனித்துவமாக பயன்படுத்துகின்றனர். இப்பூ வழிபாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது. வெள்ளைப்பூவினை சடங்கிற்குரிய பெண்ணின் தலையில் சூட்டுகின்றனர். எலும்பிச்சை பழம், இரும்புக் கம்பி முதலானவற்றை சடங்கான பெண்ணின் கையில் கொடுக்கின்றனர். வெள்ளைப்பூவினை திருமணம், சடங்கு, வழிபாடு, இறப்புச் சடங்கு என அனைத்திற்கும் பயன்படுத்துகின்றனர். ஆற்றின் ஓரங்களில் நாவாபூ பூக்கும். மாமன் முறை உடையவர்கள் பறித்து வருவார்கள் (Surulinathan, Age 65, Male, Interview, Nallurkaduvalavu, Kodaikanal Tk, Dindigul Dist, Tamilnadu, India).

சடங்குவிழா நாளான அன்று காலை பத்து மணியளவில் சடங்கிற்குறிய பெண்ணையும், துணைப் பெண்ணையும் உற்றார் உறவினர்கள் அழைத்துக் கொண்டு கேணிக்குச் செல்கின்றனர். அப்போது சடங்கிற்குறிய பெண் ஒரு கூடையில் நாட்டுக்கோழி கறி, சோற்றையும், துணைப்பெண் ஒரு பச்சை மண் கலயத்தில் காப்பியையும் எடுத்துக் கொண்டு செல்கின்றனர். இவற்றை ஊறின் வெளிப்புறத்தில் உள்ள விநாயகர் கோவிலில் வைத்து சாமி கும்பிடுகின்றனர். பிறகு சடங்குப் பெண்ணும், துணைப் பெண்ணும் அவரவர் கொண்டு வந்த பொருட்களை தலையில் தூக்கி வைக்கின்றனர். அப்போது சடங்கிற்குரிய பெண்ணின் முறைக்கார ஆண்களும், துணைப் பெண்ணிற்குரிய முறைக்கார ஆண்களும் முறைக்காரர்கள் முறையே கறி சோற்றையும், காப்பியையும் சடங்குப் பெண்ணிடமிருந்து பரித்துச் சாப்பிடுகின்றனர். சடங்கிற்குறிய பெண்ணின் முறைக்கார ஆண்கள், துணைப் பெண் வைத்திருக்கும் காப்பியை குடிக்கமாட்டார்கள். துணைப் பெண்ணிற்குறிய முறைக்கார ஆண்கள் சடங்கு பெண் வைத்திருக்கும் கறி சோற்றை சாப்பிடமாட்டார்கள். இந்நிகழ்வு முடிந்தவுடன் சடங்கிற்குரியப் பெண் தான் கொண்டு வந்த கூடையில் முறைக்காரர்கள் சாப்பிட்டு எஞ்சிய எழும்புகளை எடுத்துக் கொண்டு வருகிறார். துணைப்பெண் தான் கொண்டு வந்த காப்பி கலயத்தில் கிணற்றில் இருந்து நீர் எடுத்து வருகிறார். இதனை உறவுமுறைக்காரார்கள் அனைவரும் ஆடிப்பாடி வீட்டிற்கு எடுத்து வருகின்றனர். பிறகு விருந்து உபசரிப்பு நடைபெறுகிறது (Eswari, Age 65, Female, Interview, Kuppamalpatti, Kodaikanal Tk, Dindigul Dist, Tamilnadu, India).

மாலை நான்கு மணியளவில் சடங்கான பெண்ணையும், துணைப் பெண்ணையும் மேளதாளத்தோடு அழைத்துக் கொண்டு நாகர் மற்றும் அகரத்தம்மன் கோயிலுக்குச் செல்கின்றனர். அப்போது அரிசிமாவு, மண்பாணை, உலக்கை, நொச்சித்தலை, மூங்கில் கூடை முதலான பொருட்களை எடுத்துச் செல்கின்றனர். கோயிலில் வழிபட்டபிறகு கொண்டு சென்ற உலக்கையில் அப்பெண்கள் இருவரையும் அமரச் சொல்கின்றனர். அமரச் செய்த பெண்களின் உள்ளங்கைகளுக்குப் பின்புறத்தில் மாவினை மூன்று முறை வைத்து, அவர்களுக்குப் பின்புறமாகத் தூக்கி எரியச் செய்கின்றனர். அதன்பிறகு இரு பெண்களின் முறைக்கார மாமன்களும் அரிசி மாவினை முகத்தில் பூசி விடுகின்றனர். பதிலுக்கு அந்த பெண்களும் பூசி விடுகின்றனர். அதன்பிறகு அங்குள்ள உறவுக்கார ஆண்களும், பெண்களும் தங்கள் முகத்தில் அரிசி மாவினைப் பூசி மகிழ்கின்றனர். பிறகு மேளதாளத்தோடு மந்தைக்குச் சென்று, மந்தையில் தங்களின் பாரம்பரிய இசையோடு ஆடுகின்றனர். மண்டுத் தெய்வத்தை வணங்கியபின் வீட்டுக்குச் செல்கின்றனர். விருந்து நடைபெறுகிறது. அன்பளிப்பும், பரிசும் கொடுக்கப்படுகிறது. வீட்டிற்குமுன் திருஸ்டி களிக்கின்றனர். எலும்பிச்சம் பழத்தை நருக்கி நான்கு திசை நோக்கி தலையைச் சுற்றி எறிகின்றனர். அதோடு கருப்பு, சிவப்பு, வெள்ளை நிற சோற்று உருண்டைகளை பூப்படைந்த பெண்ணின் தலையைச் சுற்றி எரிகின்றனர். அதன்பிறகு பெண்ணை வீட்டிற்குள் அழைத்துச் செல்கின்றனர் (Nagammal, Age 64, Female, Interview, Nallurkaduvalavu, Kodaikanal Tk, Dindigul Dist, Tamilnadu, India)

## உணவு

ஆரம்ப காலங்களில் பூப்படைந்த பெண்ணிற்கு அரிசி, திணை, கேப்பை, நெல், கிழங்கு, தேன், கீரை, காளான், வேட்டையில் கிடைக்கும் விலங்குகளின் இறைச்சி, பழங்கள் முதலானவற்றை உணவாகக் கொடுத்தனர். இன்றைய காலங்களில் தேன் கலந்த மாவு, கிழங்குகள், நாட்டுக்கோழி

இறைச்சி, நாட்டுக்கோழி முட்டை, உழுந்து சேர்த்த உணவு முதலானவற்றை கொடுக்கின்றனர். விருந்தினர்களுக்கு நாட்டுப்புறங்களில் கொடுக்கப்படும் உணவுமுறைகளைப் போலவே அரிசிச்சோறு, ஆடு மற்றும் நாட்டுக் கோழிகளின் இறைச்சி, ரசம், சாம்பார், கூட்டு, பொரியல், அப்பலம், பாயசம் முதலானவற்றைக் கொடுத்து உபசரிக்கின்றனர். மொய் எழுதும் பழக்கமும், சீர் செய்யும் பழக்கமும் இம்மக்களிடையே வழக்கத்தில் உள்ளன (Kariyasamy, Age 61, Male, Interview, Kavunjikombu, Kodaikanal Tk, Dindigul Dist, Tamilnadu, India).

## கல்மனை

புலையர் இன மக்கள் கருங்கல்லால் ஆன மனையை ஊர்க்கோவிலில் வைத்திருக்கின்றனர். சடங்கு நடத்துபவர்கள் ஊர் மக்களை அழைத்துச் சென்று, சடங்கு நடைபெறும் இடத்திற்கு மனையைக் தூக்கி வருகின்றனர். இதனை மாமன் முறை உள்ளவர்கள் மட்டுமே தூக்கி வரவேண்டும். மனை சதுரமாக இருக்கும். சடங்கு நடப்பதற்கு முன்பு மனையை மஞ்சள் நீரினால் நன்கு கழுவி, வெள்ளை நூலைச் சுற்றுகின்றனர். அவற்றோடு மாவிலை, வெள்ளை நாவா பூ, தெய்வ பொட்டித் தலையைச் சேர்த்து அலங்கரிக்கின்றனர். கல்லின் மேற்புறத்தில் மஞ்சள், குங்குமம் இடுகின்றனர். கல்மனை அலங்கரிப்பிற்குப் பிறகு தாய்மாமன், பெற்றோர்கள், ஊர்ப் பெரியோர்கள் ஆகியோர் முன்னிலையில் பூப்படைந்த பெண்ணை மனையில் ஏற்றி, பொட்டுவைத்து வாழ்த்துகின்றனர். இச்சடங்குமுறை பழனிமலைப் புலையரின மலைவாழ் மக்களின் தனிப்பட்ட கலாச்சாரப் பண்பாட்டு முறையாக காணப்படுகிறது. சடங்கு நிகழ்வின்போது மண்பானை, உலக்கை, நொச்சித்தழை, மூங்கில் கூடை, குழல், தாளம் முதலான இசைக்கருவிகள், வெராளிக்குச்சி, சவுக்கங்கம்பு, வாழைப்பட்டை, பனைசோகை, எலுமிச்சம்பழம், இரும்புக் கம்பி, சினுக்கருக்கி (மயிர்க்கோதி) முதலானவற்றைப் பயன்படுத்துகின்றனர் (Rajenthiran, Age 57, Male, Interview, Nallurkaduvalavu, Kodaikanal Tk, Dindigul Dist, Tamilnadu, India).

## நம்பிக்கைகள்

பெண் பூப்பெய்தியதும் தாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு ஒதுக்குப் புறத்தில் குடிசை அமைக்கின்றனர். அக்குடிசையில் ஒரு மாதம் தனியாக இருக்கச் செய்கின்றனர். அவ்வாறு செய்யாவிடில் ஊருக்குத் தீங்கு (தீட்டு) ஏற்பட்டு ஊருக்கு நோய் (ஊர் மக்களுக்கு) ஏற்படும் என அஞ்சுகின்றனர். தீட்டான பெண்ணை வீட்டிற்குள் இருக்க வைத்தால் ஊருக்குள் இருக்கும் குலசாமி, காவல் தெய்வங்கள் ஊர்மக்களைக் காக்காமல் காட்டுக்குள் குடிபோய் விடும் என நம்புகின்றனர். இது மக்கள் சுகாதாரமாக வாழ விரும்புதலையே அடிக்கருத்தாகக் கொண்டுள்ளது எனலாம். பூப்பெய்திய பெண்ணைக் குடிசைக்குள் வைத்த ஏழு நாட்களுக்குள், இவ்வின ஆடவரோ அல்லது பெண்டிரோ வெளியூர் சென்றால் கெடுதல் நடக்கும் என்றும், நினைந்த காரியம் பலிக்காது என்றும் இம்மக்கள் நம்புகின்றனர். இவர்களுடைய மற்றும் ஓர் நம்பிக்கையில் குறிப்பிடத்தக்க ஒன்று பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு ஆகிய அனைத்து நிகழ்வுகளின் போதும் இசைக்கருவி வாசிப்பது. இவ்வினத்தார் வைத்துள்ள பாரம்பரிய இசைக் கருவிகளை இசைக்காவிடில் தங்களைக் காக்கும் சாமிகள் துணை நிற்காது என்று நம்புகின்றனர். புலையர் இனமக்களின் பந்தல் அலங்கார அமைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. கூந்தல் பனையின் பூ, கூந்தல் பனையின் இலை, பச்சை காய்களை உடைய தோரணங்கள், வாழை மரம், சவுக்கு, மூங்கில் முதலானவற்றை வைத்து பந்தல் அலங்காரம் செய்கின்றனர். அதோடு தடுப்புச்சுவர் செய்வதற்காக வாழை இலையை அடுக்கிக் கட்டுகின்றனர் (Kuppusamy, Age 68, Male, Interview, Vellarikarai, Kodaikanal Tk, Dindigul Dist, Tamilnadu, India).

## முடிவுரை

பழனிமலைப் பகுதிகளில் வாழும் புலையர் இன மக்கள் தங்களுக்கென தனித்துவமாகப் பூப்புச் சடங்கு முறைகளைக் கொண்டுள்ளனர். "நாவா பூ" என்ற வெள்ளைப்பூவை சடங்கில் பயன்படுத்துவது, பூப்படைந்த பெண் கறிசோறு சமைத்து முறைக்கார ஆண்களுக்குக் கொடுப்பது, துணைப் பெண் காப்பி கொண்டு செல்வது, அரிசி மாவு தூவி சடங்கு செய்வது மற்றும் உறக்காரர்கள் பூசிக்கொள்ளுதல்,

கல்மனையில் ஏற்றி பெண்ணிற்கு சடங்கு செய்வது, மத்தாளி தாளம் இசைப்பது முதலானவை இம்மக்களின் பூப்புச் சடங்குகளில் தனித்துமாக உள்ளன. இம்முறைகள் புலையரின மக்களின் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் இன்றளவும் அறுபடாமல் காத்து வருகின்றனர் என்றால் அது மிகையல்ல.

## References


Baktavatchala Bharathi, (1990) Panpaattu Manudaviyal, Manivasagar Pathippagam, Chennai, India.

Pavithra, R. (2013) Puliyarkalin Valviyal Sadangumuraikal, Kaviya Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License